Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 03 2025

வியாழக்கிழமை ஏப்ரல் 03, 2025 | ஒளி: 10 கதிர் 193 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# கச்சத்தீவை மீட்குமாறு முதல்வர் தனி தீர்மானம்



கச்சத்தீவை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் தனித் தீர்மானத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் அடிக்கடி கைது செய்யப்படுவது தொடர்பாக சட்டப்பேரவையில் இன்று (02) உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின், "இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது மட்டும் மாறுவதில்லை. தமிழக மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதை மத்திய அரசு மறந்துவிடுவதால், கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதை நான் அழுத்தம் திருத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பாரதிய ஜனதா கட்சி (பாஜக) ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் ஒருவர்கூட கைது செய்யப்பட மாட்டார்கள் என 2014 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் நரேந்திர மோடி சொன்னார். ஆனால், தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

பாரம்பரிய மீன்பிடி உரிமை கொண்ட நமது மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

தொடர்ச்சி P2



ஷவேந்திர சில்வா



ஜகத் ஜயசூரிய



வசந்த கரணாகொட



கருணா அம்மான்

## பிரிட்டனின் தடையை ஆராய

# மூவரடங்கிய குழு நியமனம்

இலங்கையர்கள் நால்வருக்கு எதிராக ஐக்கிய இராச்சியத்தால் அண்மையில் தடை விதிக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

அதுதொடர்பாக விடயங்களை ஆராய்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவைக்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கும், குறித்த குழுவின் பணிகளுக்கு தேவையெனக் கருதுகின்ற, குறித்த விடயம் தொடர்பான நிபுணத்துவத்துவம் மிக்க வேறெந்த அதிகாரியோ/நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக குழுவுக்கு அதிகாரமளிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்(சட்டத்தரணி) ஹர்ஷண நாணயக்கார பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான் ) பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதானி ஷவேந்திர சில்வா, கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஒஃப் த பீல்ட் வசந்த கரணாகொட, இராணுவ முன்னாள் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கே பிரிட்டன் தடை விதித்துள்ளது.

# "பிரதமர் மோடியே கேளுங்கள்"



நிதர்ஷன் வினோத்

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் சமாசங்களின் சம்மேளனம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளது.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவராலயத்தில், புதன்கிழமை சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கையளித்துள்ளனர்.

அதன் பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதீசன்

தொடர்ச்சி P2

# எதிர்வரும் காலங்களில் அரிசி இறக்குமதி



தட்டுப்பாடு இன்றி அரிசியை பெற்றுக்கொடுக்க எதிர்வரும் காலங்களில் அரிசி இறக்குமதி செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

நுகர்வோருக்கு தட்டுப்பாடு இன்றி அரிசியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய பரிந்துரைத்துள்ளது.

தொடர்ச்சி P2

# ஏப்ரல் 7 இல் நிழல் மறையும்

சூரியன் நம் நாட்டுக்கு நேராக உச்சம் பெறவுள்ளதால், உங்கள் நிழல் 2025 ஏப்ரல் 5 முதல் 15 வரை சிறிது நேரம் மறைந்துவிடும் என்று வானியலாளர் அனுர சி. பெரேரா தெரிவித்துள்ளார். வானியலாளர் அனுர சி பெரேரா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

இது உண்மையில் ஒரு ஒளியியல் மாயை. ஆண்டின் இந்த நேரத்தில், அதிகபட்ச சூரிய சக்தி பெறப்படுகிறது.

அதாவது ஏப்ரல் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் சூரியன் நம் நாட்டின் மேல் அதன் உச்சத்தில் இருக்கும். இந்த உச்சநிலை ஏப்ரல் 5 முதல் 15 வரை நீடிக்கும். கொழும்பில் சூரியன் உச்சம் பெறுவது ஏப்ரல் 7 ஆம் திகதி நிகழ்கிறது.

தொடர்ச்சி P2

# மூடப்படும் வீதிகள்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு வருகை தரும் போதும் நிகழ்வுகளில் பங்கேற்கும் போதும் கொழும்பு மற்றும் பல பகுதிகளில், விசேட போக்குவரத்து மற்றும் விசேட பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் 4 ஆம் திகதி மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பேஸ்லைன் வீதிகள் அவ்வப்போது மூடப்படவுள்ளன.

இந்த வீதிகள் மூடப்படுவதைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள், விமான நிலையத்துக்கு செல்லுவோர் தங்கள் பயண ஏற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், ஏப்ரல் 5 ஆம் திகதி, கொழும்பு காலி முகத்திடல் , சுதந்திர சதுக்கத்தைச் சுற்றியுள்ள பகுதி மற்றும் பத்தரமுல்லை அபேகம வளாக வீதிகள் மூடப்படவுள்ளன.

இந்த விசேட போக்குவரத்து திட்டத்திற்கு அனைத்து வாகன ஓட்டுநர்களும் பொதுமக்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது

கொழும்பில் சூரியன் உச்சம் பெறுவது ஏப்ரல் 7 ஆம் திகதி நிகழ்கிறது.

தொடர்ச்சி P2

## தேர்தல் நடவடிக்கைகள்

# இன்று வரை இடைநிறுத்தம்

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மனுக்கள் தாக்கல் செய்துள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வியாழக்கிழமை (03) வரை தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம், புதன்கிழமை (02) உத்தரவிட்டது. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை நீதிமன்றத்தில் சவால் செய்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த உத்தரவு பொருந்தும்.

தொடர்ச்சி P2

## ரஞ்சித்துக்கும் மைத்துனிக்கும்

# 16 வருட கடூழிய சிறை

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளராக செயற்பட்ட சாந்தி சந்திரசேன ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தலா 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து, புதன்கிழமை (02) தீர்ப்பளித்தது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது சுமார் ஆறு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, முன்னெடுத்த நீண்ட விசாரணையைத் தொடர்ந்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# 'மற்றவை' என 'பில்' போடும் வர்த்தகர்கள்

தற்போது நாட்டின் பல பகுதிகளில் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது, தற்போதைய பற்றாக்குறை காரணமாக இந்த அரிசி வகைகளின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதன்படி, சில பகுதிகளில், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி 310 ரூபாய் முதல் 320 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கிரம் சம்பா அரிசி 270 ரூபாய் முதல் 290 ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



## தென்னகோனை நீக்கும் யோசனை

# 8 ஆம் திகதி சமர்ப்பிப்பு

### பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் 10ஆம் திகதி விவாதம் நடத்தவும் தீர்மானம்

நீதிமன்ற உத்தரவின் பேரில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள, கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்காக விசாரணைக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் ஏப்ரல் 8ஆம் திகதி நிறைவேற்றத்திற்காக சமர்ப்பிக்க பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின்:

# பெயரை பயன்படுத்த ஆட்சேபனை

முன்னாள் ராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் இணைந்து உருவாக்கியுள்ளதாக அறிவித்த கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்த ஆட்சேபனை வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் த.கோபாலகிருஷ்ணன் இ ந்த ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கச்சத்தீவை மீட்குமாறு முதல்வர் தனி தீர்மானம்

97 இந்திய மீனவர்கள் இலங்கை சிறையில் இருப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். கடந்த 2024ல் 530 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். அவரது புள்ளிவிவரப்படி ஒரு நாளைக்கு இரண்டு மீனவர்கள் சராசரியாக கைது செய்யப்படுகிறார்கள்.

அண்டை நாடான இலங்கை இந்திய மீனவர்கள் மீது எவ்வித இரக்கமும் இன்றி, அவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் விதமாக, ஏன் அடியோடு பறிக்கும் விதமாக இலங்கை கடற்படையும் இலங்கை அரசும் செயல்படுவது கவலை அளிக்கிறது, இது கண்டிக்கத்தக்கது. இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதை வலியுறுத்தி முதலமைச்சராக நான் 74 கடிதங்களை வெளியுறவு அமைச்சர் மற்றும் பிரதமருக்கு எழுதி இருக்கிறேன். பிரதமரை நேரில் சந்தித்தபோதெல்லாம் இது குறித்து வலியுறுத்தி இருக்கிறேன்.

கடிதம் எழுதும்போதெல்லாம், இலங்கையில் இருந்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்படுவதும், பிறகு கைது செய்யப்படுவதுமாக இலங்கை செயல்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கச்சத் தீவை மீட்பதே என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக வலியுறுத்த விரும்புகிறேன்.

கச்சத்தீவை மாநில அரசுதான் வழங்கியது என்பதுபோல பிரச்சாரம் செய்வது அரசியல் கட்சிகளுக்கு வழக்கமாகிவிட்டது. ஆனால், அரசியல் ஆதாயத்துக்காக அரசியல் கட்சிகள் செய்வதைப் போல மத்திய அரசும் செய்வது வருந்தத்தக்கது, ஏற்க முடியாதது.

தனித்தீர்மானம்: எனவே, 'கச்சத்தீவை மீட்கும் வகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து கச்சத்தீவை மீட்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும், அரசுமுறை பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் அந்நாட்டு அரசுடன் பேசி இலங்கை சிறையில் வாடும் இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பேரவை வலியுறுத்துகிறது' என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். மீனவர்கள் நலன் கருதி இத்தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்" என தெரிவித்தார்.

# பெயரை பயன்படுத்த ஆட்சேபனை

இது தொடர்பில்தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூ. பிரசாந்தன் மற்றும் தமிழர் முற்போக்குகழகத்தின் செயலாளர் ரோஸ்மன் ஆகிய இருவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த 15.03.2025 அன்று தங்களது கட்சியும் தமிழர் முற்போக்கு கழகம் இணைந்து கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு எனும் பெயரில் ஒரு அரசியல் கூட்டணியை அமைத்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட 'கிழக்குத் தமிழர் ஒன்றியத்தி'ன் அரசியல் பிரிவாக 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரிலான அரசியல் கட்சி ஒன்று தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் ஆகிய எனது தலைமையில் 2018 உருவாகி அதற்குத் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கடிதத் தொடர்பாடல்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தைத் தங்களின் கவனத்திற்கு மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோரின் கவனத்திற்கும் 15.03.2025 மற்றும் 16.05.2025 திகதிய WhatsApp செய்திகள் மூலம் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு'எனும் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டிருந்தேன்.

மட்டுமல்லாமல் 18.03.2025 திகதியிட்டு ஊடக அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தேன். ஊடக அறிக்கையின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆனால், தாங்கள் எமது ஆட்சேபனையை பொருட்படுத்தாது தொடர்ந்து தங்களுடைய ஊடக சந்திப்புகளிலும் பத்திரிகை அறிக்கைகளிலும் பகிரங்க வெளியிலும் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறீர்கள். இதனை ஓர் 'அரசியல் பலாத்காரம்' மாகவே பார்க்க வேண்டியுள்ளது.

எனவே, தங்களுடைய கட்சி எவருடனும் வைத்துக்கொள்ளும் கூட்டுக்கு 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' என்னும் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்று மட்டுமல்லாமல் தங்கள் கட்சியின் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளிலும் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனவும் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் மீண்டும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்தின் பிரதி , தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# ஏப்ரல் 7 இல் நிழல் மறையும்

கொழும்பில் சூரியன் உச்சம் பெறுவது ஏப்ரல் 7 ஆம் திகதி நிகழ்கிறது.

அன்று மதியம் 12:12 மணிக்கு யாராவது வெளியே இருந்தால், அவர்களின் நிழல் ஒரு கணம் மறைந்துவிடும். அவர்களால் தங்கள் சொந்த நிழலைப் பார்க்க முடியாது. வேறு யாராவது அதைப் பார்க்கலாம். "இந்த நிலைமை 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு நீடிக்கும்."

"4 ஆம் திகதி சூரியன் நம் நாட்டிற்குள் நுழைகிறது. அதாவது இந்த உச்சம் பெறுதல் பருத்தித்துறை முனையில் ஆரம்பமாகிறது. ஏப்ரல் 5 ஆம் திகதி எலமல்தெனிய, ஏப்ரல் 6 ஆம் திகதி களுத்துறை, ஏப்ரல் 7 ஆம் திகதி கொழும்பு - களனி, ஏப்ரல் 8 ஆம் திகதி மஹியங்கனை போன்ற பகுதிகளில் சூரியன் உச்சத்தை அடையும் என்றார்.

# ரூ.200க்கு சத்தான உணவு திட்டம்

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதையும், பொதுமக்களுக்கு சத்தான உணவை மலிவு விலையில் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய அரசாங்க முயற்சி புதன்கிழமை (01) நாரஹேன்பிட்டியில் உள்ள தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் "பலேசா" உணவகத்தில் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, சுகாதார அமைச்சகம் மற்றும் விவசாய அமைச்சகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இது தற்போதுள்ள உணவக வணிகங்களின் ஆதரவையும் உள்ளடக்கியது மற்றும் "க்ளீன் சிறிலங்கா" திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் மூலம், மக்கள் இப்போது ரூ.200 க்கும் குறைவான விலையில் சிறப்பாக தயாரிக்கப்பட்ட சத்தான உணவுகளை பெற முடியும். அரசாங்கம் இந்த சமச்சீர் உணவு பொதியை விரைவில் அரசு மற்றும் தனியார் உணவகங்கள் இரண்டிலும் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

சமைத்த உணவுகளுக்கு மேலதிகமாக, பல்வேறு வகையான தொகுக்கப்பட்ட உள்ளூர் உணவுப் பொருட்கள் மற்றும் சத்தான சிற்றுண்டிகளும் பொதுமக்களுக்கு மலிவு விலையில் கிடைக்கும்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினரான விவசாயம், கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, பொதுமக்களுக்கு உயர்தர, ஆரோக்கியமான மற்றும் போதுமான உணவை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பொதுமக்களுக்கு வழிகாட்டவும் வணிக உணவுத் துறையில் நேர்மறையான மாற்றத்தை ஊக்குவிக்கும் "க்ளீன் ஸ்ரீலங்கா" திட்டத்துடன் இணைந்து இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக அவர் கூறினார்.

# மியன்மாருக்கு இலங்கை உதவி

மியன்மாரின் நிலநடுக்க நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளை ஆதரிப்பதற்காக இலங்கை 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக துணை வெளியுறவு அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்தார்.

மியான்மரின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான யூ தான் ஸ்வேயுடன் பாங்கொக்கில் நடந்த சந்திப்பின் போது, ஹேமச்சந்திரா, இலங்கையின் இரங்கலையும், மியான்மர் மக்களுடனான ஒற்றுமையையும் தெரிவித்தார். மருத்துவக் குழுக்களை அனுப்பி சுகாதாரத் துறை உதவிகளை வழங்குவதற்கான திட்டங்களையும் அவர் வெளிப்படுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது, புத்த கலாச்சார இராஜதந்திரம், கல்வி, தொழில் பயிற்சி மற்றும் வர்த்தக விரிவாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது குறித்து இரு அதிகாரிகளும் விவாதித்தனர். வங்காள விரிகுடாவில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பிராந்தியக் குழுவான பிம்ஸ்டெக்கின் முக்கியத்துவத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

# எதிர்வரும் காலங்களில் அரிசி இறக்குமதி

அறுவடை இடம்பெற்று வருகின்ற போதிலும் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருப்பதோடு, சந்தையில் குறிப்பிட்ட சில வகை அரிசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி போதியளவு அரிசியை கையிருப்பில் வைத்திருக்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தக,வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு ஜனாதிபதி அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை (01) ஐந்தாவது தடவையாக கூடியது. மேலும், இந்த ஆண்டில் அதிக மழை பெய்தமையால், இரண்டு முறை விளைச்சல்களுக்கு சேதம் ஏற்பட்டு, எதிர்பார்த்த அறுவடையில் கணிசமான அளவு குறைந்துள்ளதும் இங்கு குறிப்பிடப்பட்டது.

கால்நடை உணவிற்கு முறையற்ற விதத்தில் அரிசியைப் பயன்படுத்துவதே அரிசி தட்டுப்பாட்டுக்கு மற்றொரு முக்கிய காரணம் எனவும், கால்நடை உற்பத்தித் தொழிலில் கால்நடை உணவுத் தேவைக்காக உடைத்த அரிசியை இறக்குமதி செய்வது மற்றும் மாற்று உணவுகளை பயன்படுத்துவது குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

அதன்படி, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான அளவு உடைந்த அரிசியை இறக்குமதி செய்ய விவசாய அமைச்சின் பணிப்பாளர் தலைமையிலான குழுவை அமைப்பதற்கும் உணவுப் பாதுகாப்புக் குழு அனுமதி வழங்கியது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஏப்ரல் 7 இல் நிழல் மறைந்துவிடும்

அன்று மதியம் 12:12 மணிக்கு யாராவது வெளியே இருந்தால், அவர்களின் நிழல் ஒரு கணம் மறைந்துவிடும். அவர்களால் தங்கள் சொந்த நிழலைப் பார்க்க முடியாது. வேறு யாராவது அதைப் பார்க்கலாம். "இந்த நிலைமை 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு நீடிக்கும்."

"4 ஆம் திகதி சூரியன் நம் நாட்டிற்குள் நுழைகிறது. அதாவது இந்த உச்சம் பெறுதல் பருத்தித்துறை முனையில் ஆரம்பமாகிறது. ஏப்ரல் 5 ஆம் திகதி எலமல்தெனிய, ஏப்ரல் 6 ஆம் திகதி களுத்துறை, ஏப்ரல் 7 ஆம் திகதி கொழும்பு - களனி, ஏப்ரல் 8 ஆம் திகதி மஹியங்கனை போன்ற பகுதிகளில் சூரியன் உச்சத்தை அடையும் என்றார்.

# 16 வருட கடூழிய சிறை

|கடந்த 2012ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட கால பகுதியில் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் முதலமைச்சராகப் பணியாற்றியபோது, அப்போது அவரது தனிப்பட்ட செயலாளராக இருந்த சாந்தி சந்திரசேனவுக்கு தேவையற்ற சலுகைகளை வழங்கியதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

சம்பளத்தில் எரிபொருள் கொடுப்பனவு சேர்க்கப்பட்டிருந்தது. ஆனாலும், எரிபொருள் ஓர்டர்கள் மூலம் 2.6 ரூபாய் மில்லியனுக்கும் அதிகமான தொகையை வழங்கியது மற்றும் இந்த சலுகைகளை வழங்க அரசாங்க அதிகாரிகளை வற்புறுத்திய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

> **"2.6 ரூபாய் மில்லியனுக்கும் அதிகமான தொகையை வழங்கியது மற்றும் இந்த சலுகைகளை வழங்க அரசாங்க அதிகாரிகளை வற்புறுத்தியது**

விரிவான விசாரணைக்குப் பிறகு, வழக்குத் தொடுப்பு சந்தேகத்திற்கு இடமின்றி குற்றச்சாட்டுகளை நிரூபித்துள்ளதாக தீர்மானித்த நீதிபதி, இரு பிரதிவாதிகளும் இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஊழல் குற்றவாளிகள் என கூறி 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையை விதித்தார். அத்துடன், பிரதிவாதிகளுக்கு தலா 2 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# 'மற்றவை' என 'பில்' போடும் வர்த்தகர்கள்

பல பகுதிகளில், கடை உரிமையாளருக்கு மிக நெருக்கமான வாடிக்கையாளர்களால் மட்டுமே இந்த விலையில் கூட அரிசி வாங்க முடியும், மேலும் அரிசி வாங்குவதற்கான ரசீதுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

ஒரு 'பில்' கோரப்படும்போது, 'மற்றவை' என்று குறிப்பிடும் பில் வழங்கப்படுகிறது, இதன் விளைவாக, நுகர்வோர் அதிக விலைக்கு அரிசி விற்கப்பட்டதாகக் கூறி நுகர்வோர் விவகார அதிகாரசபையில் புகார் அளிக்க முடியவில்லை.

அரிசி கட்டுப்பாட்டு விலையின்படி, ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி ரூ.10க்கு விற்கப்பட வேண்டும். 240 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி 260 ரூபாய்க்கும் விற்கப்பட வேண்டும். இருப்பினும், உள்ளூர் சம்பா அல்லது கீரி சம்பா இந்த விலையில் சந்தையில் கிடைப்பதில்லை என்றும் அறியமுடிகின்றது.

# "பிரதமர் மோடியே கேளுங்கள்"

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்...

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம். ஆனால், இலங்கை இந்திய அரசுகள் இந்தப் பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காத நிலையே காணப்படுகிறது.

எனவே, இலங்கைக்கு வருகின்ற இந்தியப் பிரதமர் இலங்கை- இந்திய மீனவர் விவகாரத்திற்கு சரியான தீர்வொன்றை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம்.

அதாவது எமது கடற்பரப்பிற்குள் எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக்கூடாது. அதனையும் மீறி வந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள எமது மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளோம்.

மேலும் தொடர்ந்து இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பி முன்னரைப் போன்று போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

# 8 ஆம் திகதி சமர்ப்பிப்பு

பாராளுமன்றத்தை ஏப்ரல் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில், பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்த இரண்டு நாள் விவாதம் ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பம். இதற்கான இரண்டு நாள் விவாதத்தில் பிறிதொரு நாளை மே மாதத்தில் ஒதுக்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் புதன்கிழமை (02) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

ஏப்ரல் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளை ஆகியவற்றின் விவாதத்திற்காக ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் ரி.எம். டபிள்யூ. தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தில் பி.ப 5.30 மணிக்கு சமர்ப்பிக்கப்படும்.

ஏப்ரல் 09ஆம் திகதி புதன்கிழமை பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டுக்கான விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட "பட்டலந்த வீட்டுத் தொகுதியில் சட்டவிரோத தடுப்பு முகாம் மற்றும் சித்திரவதை முகாம் அமைத்து அவற்றை நடத்திச் சென்றமை தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை" குறித்த விவாதத்தை ஏப்ரல் 10ஆம் திகதி வியாழக்கிழமை, நடத்துவதற்கும், இதற்கான இரண்டு நாள் விவாதத்தில் பிறிதொரு நாளை மே மாதத்தில் ஒதுக்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# இன்று வரை இடைநிறுத்தம்

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதியரசர் எம்.டி. முகமது லாஃபர் மற்றும் நீதியரசர் கே.பி. பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

# சுருட்டிய ஜி.எஸ்ஸை சும்மா விடாத யுவதி

சுஜிதா, கௌசல்யா

கிராம சேவகர்களை (GS) பொருத்தவரையில், அவர்களின் சேவைகளை குறைத்து மதிப்பிட முடியாது. விடுமுறை நாட்களிலும் கட்டாயமாக கடமையாற்ற வேண்டிய நிலையிலேயே அவர்கள் இருக்கின்றனர். எனினும், ஒருசிலர் கையூடல் செய்து விடுகின்றனர். ஏன்? இலஞ்சமும் வாங்கி விடுகின்றனர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவித் தொகைக்கான விண்ணப்பத்தை உரிய அலுவலகத்துக்கு அனுப்பாது விட்ட சம்பவமொன்று தலவாக்கலை பகுதியில் இடம்பெற்றிருந்தது.

எனினும், கொடுப்பனவை வழங்காது, இழுத்தடிப்பு செய்த சம்பவமொன்று லிந்துலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லிந்துலை பகுதியிலுள்ள தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதிக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்காக சம்பந்தப்பட்ட நபருக்கு அரசாங்கத்தினால் மாதாந்தம் 7,500 ரூபாய" வீதம் கிராம உத்தியோகஸ்தர் ஊடாக வழங்கப்பட்டு வந்துள்ளது.




இருப்பினும், கடந்த 2024ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

கிராம உத்தியோகத்தரை பல தடவை தொடர்பு கொண்ட போதிலும், அவர் பொருத்தமற்ற முறையில் பதிலளிப்பதாகவும் பாதிக்கப்பட்ட யுவதி மற்றும் அவரின் தந்தை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், லிந்துலை பொலிஸ் நிலையத்தில் மார்ச் 26ஆம் திகதியன்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுநீரக பாதிப்பை பொருட்படுத்தாது தனது மருத்துவ சிகிச்சைக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் குறித்த யுவதி கொழும்பில் தொழில் செய்து வருகின்றார்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கையளிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இருந்த போதிலும், தனது பிள்ளைக்கு சேர வேண்டிய தொகையை பெற்றுத் தர வேண்டும் என பெற்றோர் தெரிவித்தனர்.

இது போல், அரசினால் வழங்கப்படும் உதவிகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவிடாது தடுக்கும், அரச அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். .

கடந்த சில மாதங்களுக்கு முன் பேராதனை வைத்தியசாலையில் சத்திரை சிகிச்சைக்கு முகங்கொடுத்த பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில் ஜனாதிபதி நிதியத்திடம் இருந்து உதவிக்காக நாடியுள்ளார்.

ஆனால், தலவாக்கலை. பிரதேச செயலகத்தில் பணியாற்றும் விடயத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் அலட்சியத்தினால் சம்பந்தப்பட்ட மாணவியின் விண்ணப்பம் ஜனாதிபதி செயலகத்திற்கு உரிய காலத்திற்குள் அனுப்பப்படவில்லை. அது தொடர்பில், இன்று வரையும் எவ்விதமான பதிலும் இல்லை

# கொழும்பில் ஜப்பான் கப்பல்கள்

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படைக்கு சொந்தமான BUNGO(MST-464) மற்றும் ETAJIMA(MSO-306) என்ற கப்பல்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றிற்காக புதன்கிழமை (01) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன், இலங்கை கடற்படையினர், கப்பலை கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

இவ்வாறு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த Uraga-Class Minesweeper Tender வகைக்கு சொந்தமான 'BUNGO' என்ற கப்பலானது 141 மீற்றர் நீளமும், மொத்தம் 125 அங்கத்தவர்களை கொண்டதாகும், கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண்டர் TANAKA Koji பணியாற்றுகிறார்.

இவ்வாறு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த Minesweeper வகைக்கு சொந்தமான ETAJIMA என்ற கப்பலானது 67 மீற்றர் நீளமும், மொத்தம் 54 அங்கத்தவர்களை கொண்டதாகும், கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண்டர் ODA Takayuki பணியாற்றுகிறார்.

மேலும், இந்த கப்பல்களானது இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் அங்கத்துவ குழுவினர்கள் கொழும்புப் பிரதேசத்தில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களை பார்வையிட தீர்மானித்துள்ளதுடன், உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர் 2025 ஏப்ரல் 04 ஆம் திகதியன்று கப்பல்களானது இலங்கையை விட்டு புறப்படவுள்ளன.












# ஒரே இடத்தில் இரு விபத்துகள்; ஒருவர் பலி: ஒருவர் படுகாயம்

வ.சக்தி , வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் கிரான்குளம் விஷ்ணு ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இடத்தில் புதன்கிழமை(02) காலை கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதி இருந்தது. இதில் காரைச் செலுத்தி சென்ற சாரதி தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளதுடன், கார் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.


அந்த கார் வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதால் மின்கம்பிகள் அறுந்து அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

ஸ்தலத்திற்கு விரைந்த மின்சார சபை ஊழியர்கள், தடைப்பட்டிருந்த மின்சாரத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் தனது மகனுடன் சென்ற ஒருவர் குறுக்கே இருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டுள்ளனர். இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவருடன் பயணித்த மகன் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே அதே இடத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் குறித்த மின் கம்பிகள் அறுந்திருந்தாலும் மின்சார பழுதுபார்க்கும் வேலைகள் நடைபெறுகின்றன என்பது தொடர்பாக சமிக்ஞை ஏதுமின்றி மின்சார சபை ஊழியர்கள் செயற்பட்டதன் காரணமாக இவ் விபத்து இடம்பெற்றதாக அங்குள்ள பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





அரச இலக்கிய விருது விழா;

# ஏப்ரல் 20 வரை விண்ணப்பிக்கலாம்

வி.ரி.சகாதேவராஜா

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் அரச இலக்கிய விருது வழங்கல் தொடர்பாக இலங்கை எழுத்தாளர்களிடமும் மற்றும் நூல் வெளியீட்டாளர்களிடமும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2025ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கும் வைபவத்தின் பொருட்டு 2024ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்து விருதுகள் வழங்கப்படும்.

எழுத்தாளர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

அதனடிப்படையில், 2024ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் அதே ஆண்டு டிசெம்பர் 31ஆம் வரையிலான காலப்பகுதியில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டதும் 49 பக்கங்களுக்குக் குறையாததுமான அச்சிடப்பட்ட நூலின் மூன்று (3) பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட வேண்டிய நூல்களை 'அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச்செய்யலாம்;.

நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஆகும்.

அரச விருது வழங்கலுக்காக நூல்களை மதிப்பீடு செய்வதற்கு கீழ்க்காணும் பிரிவுகளை சார்ந்த தமிழ் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- n சுய நாவல் இலக்கியம்
- சுய சிறுகதைத் தொகுப்பு
- சுய கவிதைத் தொகுப்பு
- சுய இளையோர் இலக்கியம்
- சுய பாடலாக்கத் தொகுப்பு
- சுய நாடக இலக்கியம்
- சுய அறிவியல் புனைகதை ஆங்கில மொழிகளில் பிரசுரமான
- சுய சிறுவர் இலக்கியம் (16 பக்கங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) சுய புலமைத்துவ மற்றும் ஆய்வு சார் நூல்
- சுய இலக்கிய திறனாய்வு
- சுய ஒலி-ஒளி படைப்பு பிரதியாக்க நூல்
- சுய நானாவித விடய நூல்கள்
- மொழிபெயர்ப்பு நாவல்
- மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்பு
- மொழிபெயர்ப்பு கவிதைத் தொகுப்பு
- மொழிபெயர்ப்பு நாடகம்
- மொழிபெயர்ப்பு புலமைத்துவ மற்றும் ஆய்வு சார் நூல்
- மொழிபெயர்ப்பு நானாவித விடய நூல்கள்
- மொழிபெயர்ப்பு இளையோர் இலக்கியம்
- மொழிபெயர்ப்பு சிறுவர் இலக்கியம்
- மொழிபெயர்ப்பு இலக்கிய திறனாய்வு நூல்
- மொழிபெயர்ப்பு

ஒலி,ஒளி படைப்பு பிரதியாக்க நூல் நூல்கள் குறிப்பு:- மொழிபெயர்ப்புக்கான நூல்கள் அனுப்பும் போது கட்டாயம் அவற்றின் மூலப் பிரதியினை சேர்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது குறித்த மேலதிக விபரங்களுக்காகத் தொடர்பு கொள்ளலாம். தொ.பே.: 011-2872030 அல்லது 011-2872031 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# மயக்கமடைந்த பெண்ணிடமிருந்து ஆயுதங்கள் மீட்பு

வத்தளை, ஹேகித்த வீதியில் உள்ள வாடகை விடுதியில் குளியலறையில் மயக்கமடைந்த ஒரு பெண்ணை சோதனை செய்து விசாரித்தபோது, வெளிநாட்டில் வசிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியால் அவருக்கு வழங்கப்பட்ட T-56 துப்பாக்கி, வெடிமருந்துகள் மற்றும் மெத்தம்பேட்டமைன் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க முடிந்ததாக வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியை வைத்திருந்த அவரது காதலன் என்று கூறப்படும் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரான அந்த பெண்ணிடம் இருந்து ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு T-56 துப்பாக்கி, 113 தோட்டாக்கள் மற்றும் 4 மகசின்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் கூறுகின்றனர், இவை காதலன் என்று கூறப்படுபவரின் வசம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வத்தளை, ஹேகித்த வீதியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் பெண் ஒருவர் தூக்கில் தொங்கியதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, வத்தளை பொலிஸார் விசாரணை நடத்தச் சென்றபோது, தங்கும் விடுதியின் அறையொன்றில் உள்ள குளியலறையில் அந்தப் பெண் மயக்கமடைந்த நிலையில் இருப்பதைக் கண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நணண்பருடன் சென்றவர் சடலமாக மீட்பு

பாறுக் ஷிஹான்

நண்பருடன் மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு சாவாறு பகுதியில் செவ்வாய்க்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

கல்முனை - பாண்டிருப்பு செல்லப்பா வீதி பாண்டிருப்பு 01 ஏ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய செல்வராசா வெற்றி வேல் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை(31) மாலை தனது நண்பருடன் மீன் பிடிக்கச் சென்ற நிலையில், காணாமல் போயுள்ளார். இந்நிலையில் தனது கணவரைக் காணவில்லை என மனைவி, பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடுக்கமைய காணாமல் போனவரின்



நண்பரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் செவ்வாய்க்கிழமை (01) அன்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில், கடவுசீட்டு பிராந்திய அலுவலகம்

இலங்கையில் அதிகளவான மாவட்டங்களைக் கொண்டுள்ள வடமாகாணத்தில் தற்போது வவுனியா மாவட்டத்தில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு விடயஞ்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வவுனியா பிராந்திய அலுவலகத்திற்குப்பயணம் செய்வதற்கு அதிக நேரத்தை செலவிட வேண்டியுள்ளது.

வடமாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரித சேவைகளை வழங்குவதற்காக குடிவரவுமற்றும் குடியகல்வுதிணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென, 2025.01.31 அன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்மொழியப்பட்டுள்ள யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் இம்மாதத்திலேயே நிறுவுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அரசியல் சதுரங்கத்தில் மோடிக்கு 'செக்' வைத்த அரசாங்கம்

சதுரங்க விளையாட்டில், ராஜாவை நகர்த்த விடாது, 'செக்' வைப்பவரே வெற்றிபெறுவார். எனினும், அதற்கு முன், ஏனைய காய்களை நகர்த்தியே ஆகவேண்டும். இது யாவரும் அறிந்த விடயமாகும். எனினும், அரசியல் சதுரங்கம் வித்தியாசமானது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, ஏப்ரல் 4 இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர், ஏப்ரல் 6 வரை தங்கியிருந்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் கலாநிதி அருணி அமசூரிய உள்ளிட்ட தரப்பினரை சந்திப்பார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் வரும் நரேந்திர மோடி, அனுராதபுரத்துக்குச் சென்று ஸ்ரீமகா போதியை வழிபடுவார். அத்துடன், இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் செயற்படுத்தப்படும் பல திட்டங்களை ஆரம்பித்து வைப்பார்.

இதற்கிடையே, தமிழ் தரப்புகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். ஏனைய முக்கியஸ்தர்களும் மோடியை சந்திப்பார்கள் என கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி, இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் இரு தரப்பினரும் கைச்சாத்திடவுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில், இதற்கு முன்னர் 1987 ஜூலை 29அன்று அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ்காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும் இடையில், ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

அதனூடாக, மாகாண சபைகள் நிறுவப்பட்டன, வடகிழக்கு மாகாண சபையும் உருவாக்கப்பட்டது. எனினும், தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஜே.வி.பியின் (மக்கள் விடுதலை முன்னணி) வழித்தோற்றலாகும். அந்தக் கட்சி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கால், வடகிழக்கு, வடக்கு, கிழக்காகப் பிரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காப்பது பிரதான அம்சங்களில் ஒன்றாகும். ஆகையால், ஒரு நாட்டின் இறைமைக்குள் இன்னொரு நாடு, தலையிடாது என்பதே உண்மை.

இந்தியாவின் குழந்தையான மாகாண சபை, தற்போதும் செயற்படாது உள்ளது. அந்த மாகாண சபையே, ஈழத் தமிழர்களுக்கு கிடைத்த ஓரளவுக்கேனும் சொல்லக்கூடிய தீர்வாகும். எனினும், கடந்த ஆட்சியாளர்கள், காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்காமலே இருந்தன.

மோடியை, தமிழ்த் தரப்பினர் சந்திக்கும் போது, மாகாண சபைத் தேர்தலைக் கட்டாயமாக வலியுறுத்துவார்கள். எனினும், முந்திக்கொண்ட ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான அரசாங்கம், இவ்வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாது என்றும் தெரிவித்துள்ளது. இதனை அரசாங்க பேச்சாளர் நலிந்த திஸாநாயக்க, களுத்துறையில் வைத்து, தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கும், இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையிலான நிகழ்ச்சி நிரலில், 13ஆவது திருத்தம் தொடர்பில், தான் அறிந்த வகையில் உள்ளடக்கப்படவில்லை என அமைச்சர் பிமல் ரத்னாயக்க, யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்து விட்டார். ஆக, மோடி வருமுன்னே அரசாங்கம், மாகாண சபை தேர்தல், இந்தியாவின் குழந்தையான 13ஆவது திருத்தம் ஆகியவற்றுக்கு அரசியல் 'செக்' வைத்து விட்டது என்பதே உண்மையாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனிதர்களின் தேவைகள் நிறுத்தப்படுவதில்லை. எவ்வளவு பெரும் செல்வம், கல்வி, புகழ் என்பன சேர்ந்தாலும் எந்த ஒரு மனிதனும் முழுமையாகத் திருப்திப்பட மாட்டான். எங்கோ ஒரு குறையைச் சொல்லிவிடுகின்றார்கள்.

நாடுகளின் அரசுகள் கூட, ஆசை மிகுதியால் பக்கத்து நாடுகளுக்குள் நுழைந்து, அட்டகாசம் செய்து அந்த நாட்டை கைப்பற்றிவிடுவதுண்டு.

எளியவர்களை உதைப்பது, காலம் முழுக்க நடந்துகொண்டிருக்கின்றது. அரசியலில் இன்று நடப்பது என்ன? வலிமையற்ற அரசாங்கத்தை வைத்திருக்கும் அரசுகள், சிறுபான்மை மக்களுடன் அடிக்கடி மோதுகின்றன.

அவர்களை அடக்கி வைத்திருப்பதில் புலன்களைச் செலுத்தினால், மிஞ்சுவது மேலதிக ஆசைகளும் ஆணவமும் தான். உலக சரித்திரங்களை அறிந்தவர்கள் கூட, தங்களுக்கு அரச பதவி வந்தால், எவரை மதிக்கின்றார்?

ஓரிரு நல்லவர்கள் மாத்திரம், பதவியில் நீதியுடன் கரும மாற்றுகின்றார்கள். பிறரை வருத்தி, அவர்களின் முயற்சியால் வரும் முன்னேற்றம் ஈடேற்றம் தராது.

மாந்தர்கள், ஒருவரை நம்பி ஒருவர் இருக்க வேண்டும். அறத்தை அறியாதவர்கள், வெறுக்கும் காரியங்களைச் செய்வார்கள். அநேகர் அனுபவங்களை மறந்து போகின்றார்கள். இதனாலேயேதான் துன்பங்கள் வருகின்றன.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தேர்தல்கள் இடைநிறுத்த வாய்ப்பு

முருகானந்தம் தவம்

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், 8,325 உறுப்பினர்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் 4,903 வட்டாரங்களிலிருந்தும் மக்களினால் நேரடியாக 4,995 உறுப்பினர்களும், விகிதாசார அடிப்படையில், 3,330 உறுப்பினர்களும். தெரிவு செய்யப்படவுள்ளனர். இதன்படி, 60 சதவீதமான உறுப்பினர்கள் வட்டார அடிப்படையிலும் 40 சதவீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்காக மார்ச் 17 முதல் 20 வரை நண்பகல் 12 மணிவரை நாடளாவிய ரீதியில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கமைய அரசியல் கட்சிகளின் 2,260 வேட்புமனுக்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 2900 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவற்றில் 425 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது. எந்த முறையும் இல்லாதவாறு இம்முறை அதிலும் குறிப்பாகத் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிக வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கட்சிகளின் 2,260 வேட்பு மனுக்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 2,900 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் 425 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய கட்சிகளின், சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் அதிகளவில் நிராகரிக்கப்பட்டுள்ள போதிலும், தேசிய மக்கள் சக்தியின் ஒரு வேட்புமனு கூட எங்குமே நிராகரிக்கப்படவில்லை.

இதில் வடக்கு, கிழக்கில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் அதிகளவில் நிராகரிக்கப்பட்டுள்ளதை பார்ப்போம்.

### யாழ். மாவட்டத்தில்

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 148 கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்ததோடு, அதில் 136 கட்சிகளும் 23 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. அவற்றில், 136 கட்சிகள் மற்றும் 10 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், 22 கட்சிகள், 10 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

யாழ். மாநகர சபைக்கான வேட்பு மனுவில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஆகிய கட்சிகளுடைய வேட்புமனுக்களும், ஞானப்பிரகாசம் சுலக்சன், நரேந்திரன் கௌசல்யா (அர்ச்சுனா எம்.பி. அணி) ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் வல்வெட்டித்துறை நகரசபைக்கான வேட்புமனுவில் இராமச்சந்திரன் சுரேன், யோகேஸ்வரி அருளானந்தம் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் சாவகச்சேரி நகரசபைக்கான வேட்புமனுவில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்புமனுவும், மகாலிங்கம் சதீஸ், பெரியான் சிவகுருநாதன் ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

அதேபோன்று, காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகியவற்றின் பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்புமனுவும், துரைராஜா சுஜிந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் வலிகாமம், வடக்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், சவரிமுத்து ஸ்டாலின் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், இலங்கை கம்னியூஸ்ட் கட்சியின் வேட்பு மனுவும் . வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், மக்கள் போராட்ட முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்களும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுக்களும், தவம் தவனிலாவின் தாசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் பருத்தித்துறை பிரதேச சபைக்கான வேட்பு மனுவில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுக்களும் அல்பிரட் ரெஜி ராஜேஸ்வரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைக்கான வேட்புமனுவில், வைத்தியலிங்கம் ஜெகதாஸ் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் குணரட்ணம் குகானந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நல்லூர் பிரதேச சபைக்கான வேட்புமனுவில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் , வேட்புமனுக்களும் திலீப் தீபாரஞ்சன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும்

### கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு ஏழு கட்சிகள் மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த வேட்பு மனுவில் ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. கரைச்சி பிரதேச சபைக்கு பத்து கட்சிகளும் மூன்று சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்தநிலையில் 3 கட்சிகளின் வேட்பு மனுக்களும் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காக கட்சிகள் .சுயேட்சைக் குழுக்கள் என 38 அணிகள் வேட்பு மனு தாக்கல் செய்தன. இதில் 2 கட்சிகளதும் 2 சுயேச்சை குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனு தாக்கல் செய்த நிலையில், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 7 கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்தன. துணுக்காய் பிரதேச சபைக்கு 6 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு 6 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் 2 சுயேச்சைக் குழுக்களினதும் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய பெரமுன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### மன்னார் மாவட்டத்தில்

மன்னார் மாவட்டத்தில் 38 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மன்னார் நகர சபையில் 9 கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யப்பட்டன. முசலி பிரதேச சபைக்கு 9 கட்சிகள் ,ஒரு சுயேச்சைக் குழு வேட்பு மனுத் தாக்கல் செய்தன. நானாட்டான் பிரதேச சபைக்கு 7 கட்சியினதும் ஒரு சுயேச்சைக் குழு உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றது. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 9 கட்சியினதும் ஒரு சுயேச்சைக் குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைத்தன .முசலி பிரதேச சபைக்கு கிடைத்த 10 வேட்பு மனுக்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு கிடைத்த 10 வேட்பு மனுக்களில் இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, சர்வஜனம் அதிகாரம் ஆகிய 4 கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. மன்னார் நகர சபைக்கு கிடைத்த 10 வேட்பு மனுக்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி, சுயேச்சைக் குழு ஆகியவற்றின் 2 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

### வவுனியா மாவட்டத்தில்

வவுனியா நகரசபைக்கு 10 கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. இதில், மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பு மனுவும் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளர் ஒருவரும் நிராகரிக்கப்பட்டுள்ளனர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு 12 கட்சிகளும் 4 சுயேச்சை குழுக்களும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தன.

அவற்றில் ஜனநாயக தேசிய கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, ஒரு சுயேச்சை குழுவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. வெண்கல செட்டிகுளம் பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்த ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு 9 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில், 2 சுயேச்சைக் குழுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் 7 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த நிலையில், ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### திருகோணமலை மாவட்டத்தில்

திருகோணமலை மாவட்டத்தில் 13உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காக 126 கட்சிகளும், 12சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தன . இதில் 23 கட்சிகளினதும், 3சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தில், 12 உள்ளூராட்சி சபைகளுக்கு 118 வேட்பு மனுக்கள் தாக்குதல் செய்யப்பட்டன. இதில் 17 மனுக்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில்

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 20 கட்சிகளும், 24 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 44 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வாறாக வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பல வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதால் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில், வழக்குகள் விசாரணைகளுக்கு எடுக்கப்பட்டுள்ளன. இதனால் சில நகரசபைகள், பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இடைநிறுத்தப்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

## கடிதங்கள்

### பழுதடைந்த பழ விற்பனை அதிகரிப்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பழங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் பழுதடைந்த பழ வகைகள் விற்பனை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வெள்ளரிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம் கொய்யாப்பழம், பலாப்பழம், பப்பாசி, மாதுளம் பழங்கள் பழுதடைந்த நிலையிலும், பங்கஸ் தொற்று ஏற்பட்ட நிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதால் நுகர்வோர்கள் சுகாதார ரீதியாக பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்வதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்களின் திடீர் பரிசோதனை தொய்வின் காரணமாக இவ்வாறு பழுதடைந்த பழ விற்பனை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றதுடன் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

- பாறுக் ஷிஹான்



# சர்வதேச கேரட் தினம்





**உலகெங்கிலும் கேரட் மற்றும் அதன் ஆரோக்கிய நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த சர்வதேச கேரட் தினம் 2003ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.**

உலகம் முழுவதும் உள்ள கேரட் ஆர்வலர்களின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 4ஆம் திகதி, சர்வதேச கேரட் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

2012 ஏப்ரல் 4ஆம் திகதி அன்று பிரான்ஸ், இத்தாலி, ஸ்வீடன், ரஷ்யா, ஆஸ்திரேலியா, யுனைடெட் கிங்டம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் கொண்டாட்டங்கள் அறிவிக்கப்பட்டதன் மூலம் இந்த நாள் மிகவும் பிரபலமாகி வருகிறது.

தற்போதைய கால கட்டத்தில் உலகளவில் கேரட் ஊதா, சிவப்பு மற்றும் வெளிர் மஞ்சள் என பல்வேறு வண்ணங்களில் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகின்றன.

கேரட்டில் அதிக அளவிலான நார்ச்சத்து, பொட்டாசியம் போன்ற சத்துகள் அடங்கி உள்ளது. உணவு வகையிலும், மருத்துவத்திலும் பல்வேறு பயன்களைத் தரவல்லது கேரட். மலைப்பகுதிகளில் விளையும் கிழங்கு வகையை சார்ந்தது.

கேரட் செடியின் வேர்ப் பகுதியில் வளரக்கூடியது. கேரட் பச்சையாகக் கூட சாப்பிடக்கூடியது. இயற்கையாகவே இனிப்புத் தன்மை உடைய கேரட்டை விரும்பாதவர்கள் எவரும் இல்லை எனலாம்.

கொலஸ்ட்ராலை குறைக்கக் கூடிய நார்ச்சத்துகள் இதில் அதிகம் உள்ளது. கேரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் கண் பார்வையை வலுவாக்குகிறது. வாரத்திற்கு மூன்று முறை கேரட் சாப்பிடுவதால் மாலைக்கண் நோய் வராமல் தடுக்கலாம்.

தினமும் ஒரு கேரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்ற, குடல் புண்கள் வராமல் தடுக்கிறது. கேரட் சாற்றுடன், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட்டால் பித்த கோளாறுகள் நீங்கும். தினமும்

கேரட்டை தோலைச் சீவி சாப்பிடலாம். சீவிய தோலை அரைத்து உடலில் தடவினால் வெயிலால் ஏற்படும் வேர்க்குரு, சிவப்பு தன்மை நீங்கும்.

பால் பிடிக்காத குழந்தைகளுக்கு கேரட் மில்க் ஷேக் செய்து கொடுக்கலாம். இதில் கால்சியம் இருப்பதால் எளிதில் ஜீரணமாகும். வாயுத் தொல்லையால் அவதிப்படுவார்களுக்கு கேரட் ஜூஸ் மிகவும் நல்லது. தினம் பணிகளுக்குச் சென்றுவிட்டு சோர்வாக வீடு திரும்பினாலோ அல்லது வீட்டுவேலைகளை முடித்துச் சோர்வாக இருந்தாலோ கேரட் சாறுடன் சிறிது ஏலக்காய், பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம். இதனால் உடல் சோர்வு உடனடியாக நீங்கும்.

**எடை இழப்புக்கு உதவுகிறது**

கேரட் ஒவ்வொருவரின் உணவிலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஆரோக்கியமான காய்கறிகளில் ஒன்றாகும். அவை குறைந்தபட்ச கலோரிகளைக் கொண்டிருக்கின்றன மற்றும் ஊட்டச்சத்துக்கள் மற்றும் நார்ச்சத்து அதிகம். இதனால் அதிகம் பசி எடுக்காது. இது உடல் எடையை குறைக்க முயற்சிப்பவர்களுக்கு ஒரு சரியான நண்பன்.

**தோல் தரத்தை மேம்படுத்துகிறது**

தோல் பராமரிப்புப் பொருட்களைப் பயன்படுத்துவதில் நீங்கள் மிகவும் சோர்வாக இருக்கிறீர்களா? சில இயற்கை மற்றும் ஆரோக்கியமான மாற்றுகளைத் தேடுகிறீர்களா? அப்போ உங்கள் உணவில் கேரட்டை சேர்த்துக் கொள்ளுங்கள். இது ஒரு சிறந்த சிற்றுண்டி. இது முகப்பரு, தோல் அழற்சி மற்றும் பிற தோல் நோய்களுக்கு சிகிச்சையளிக்க உதவும்.

**எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்**

கேரட்டில் வைட்டமின் சி நிறைந்துள்ளது. இது நோயெதிர்ப்பு அமைப்பு ஆதரவு மற்றும் குணப்படுத்துதலுக்கு முக்கியமானது. இதில் உள்ள வைட்டமின் ஏ, நோயெதிர்ப்பு மண்டலத்தை ஆதரிக்கிறது. இது உடலில் இருந்து கிருமிகளை வெளியேற்ற உதவுகிறது.

**இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது**

இதய நோயைத் தூண்டும் ஆபத்து காரணிகளில் ஒன்று உயர் இரத்த அழுத்தம். கேரட்டில் பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து நிறைந்துள்ளது.

இது இரத்த அழுத்த அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது. ஆகையால், கேரட்டை உணவில் சேர்த்து கொள்வதை, ஏனையோருக்கும் பழக்கப் படுத்துவதை இன்றிலிருந்தாவது ஆரம்பிப்போம்.



# விசித்திரமான உலகம்



றொசில்டா அன்டன்



"நாளைக்கு பயணம் இந்த நேரத்தில் எங்க போய் தொலைந்தாள்" "வந்துட்டன் அம்மா வந்துட்டன்... தேவி வீட்ட போனன், இனி அவளை எப்பம்மா பார்ப்பன், பயணம் சொல்லிட்டு வந்தன்" "சரி போய் எல்லா ஆவணங்களும் எடுத்து வைச்சியா.. பாரு ஜெர்மனிலிருந்து கோல் வந்தது, அக்கா தான் எடுத்திருப்பா என்னவென்று கேளு"

"சரியம்மா" தாய் மாலதி பரபரப்பாக தனது அடுத்த வேலைகளை கவனிக்க சென்று விட்டாள். வட்சப்பில் "அக்கா கோல் எடுத்தனியோ அம்மா சொன்னவ சொல்லு என்ன"

"ஒன்றுமில்லை அபி, நீ ஒன்றையும் மறக்காமல் எல்லாத்தையும் எடுத்து வை என்று நினைவுப்படுத்தான் எடுத்தன்" "சரி அக்கா பயப்பிடதேயும் எல்லாவற்றையும் எடுத்திட்டன். நான் ஏயார்போட்டில் வைத்து கதைக்கிறன் அக்கா" தொலைபேசியின் அழைப்பை நிறுத்தியவள் வானொலியை திருகினாள் அபி. சூரியன் மதிய நேர உள்நாட்டு செய்திகளுடன் வெளிநாட்டு புதினங்களும் வாசிக்கப்பட்டது. காதலனுக்கு நஞ்சு வைத்து கொன்ற காதலிக்கு மரணதண்டனையாம்"

"குற்றம் செய்றவங்கள் எல்லாருக்கும் இப்படி மரண தண்டனை கொடுத்தால் உலகத்தில் குற்றவாளிகள் இருக்கவே மாட்டார்கள் போலும்' அபி தனக்குள்ளே முணுமுணுத்துக்கெண்டாள். அபியிடம் பத்திரிகை வாசிக்கும் பழக்கமும் இருந்தது. சமூகத்தில் நடக்கும் அட்டூளியங்களை அன்றாடம் காணும் போது அவள் கோவப்பட்டு தேவியிடம் கவலைப்படுவாள். "ஏனடி இப்படி நல்லவர்களை தண்டிக்கும் கடவுள் கெட்டவர்களை தண்டிப்பதில்லை. நான் மட்டும் நீதிபதியாக இருந்திருந்தால் கெட்டவர்களை மரண தண்டனை கொடுத்து தண்டிப்பேன்" என்பாள்.

அந்த ஊரில் அபியின் குடும்பம் பெரியது. ஆறு பெண்பிள்ளைகள். அப்பா சாதாரண கூலி தொழிலாளி, அம்மா வீட்டு தோட்டம்,கோழி, ஆடு, மாடுகளை வளரத்து வீட்டு வேலைகளை கவனித்துக்கொள்வாள்.


அபி வீட்டில் ஐந்தாவது பெண்பிள்ளை. எப்போதும் அமைதியானவள். பக்தி நிறைந்தவள். எப்போதும் கோயில் குளம் என்று சுற்றுவாள். வானொலியில் இசை, செய்திகள், புதினங்கள் கேட்பது அபியின் பொழுது போக்கு. நான்கு அக்காமாரும் திருமணம் செய்து விட்டார்கள். இவளுக்கு திருமணமாகி ஒரு வருடத்தில் கணவனிடம் செல்ல ஏற்பாடாகியிருந்தது. கணவன் மதன் பிரான்சில் இருப்பதால் குடுப்பத்தை பிரிய வேண்டியிருந்தது. மதனின் குடும்பம் விரும்பி அபியை பெண் கேட்டு வந்தார்கள். சீதனம் வேண்டாம் என்ற நல்ல மனது அவனது குடும்பமும் நல்ல குடும்பம். அதனால் அவளும் திருமணத்திற்கு ஓம் என்று கூற, திருமணமும் மிக எளிமையாக நடைப்பெற்றது. ஒரு வருடத்தின் பின் மதனிடம் செல்ல பெற்றோரை சகோதரிகளையும் அவர்களின் குழந்தைகளையும் பிரிவதையிட்டு அழுதாள். ஏயார்போர்ட்டில் தனித்து விடப்பட்டது போன்றிருந்தது அவளின் உணர்வு. தெரியாத தேசம், புரியாத மொழி, அறியாத மக்கள் என புதிய சூழலில் அவள் வாழ போகின்றாள். விமான நிலயத்தில்

நான்கு மணித்தியாலம் காத்திருப்பு.

அவளது கடந்த கால வாழ்வினை பின் நோக்கி பார்த்தாள். "அம்மா, அக்கா என்ட சாரியை உடுத்திட்டு கோயிலுக்கு போயிட்டா இப்ப நான் எதை உடுத்திறது"

அன்று முழுவதும் வீடு ரணகளம் தான். வீட்டில் எப்போதும் சத்தமாக தான் இருக்கும். "ஐந்தை பெற்றல் அரசனும் ஆண்டியாவன்' என்பது போல" ஆனால், இந்த பழமொழிக்கு வேற அர்த்தம் என்று அவளுக்கு தெரிந்து என்ன பயன். அவளின் அப்பா, அம்மா, ஆறு பெண் பிள்ளைகளை அல்லவா பெற்று உள்ளார்கள் என்று ஊரே சொல்லும். யாராவது எங்கட வீட்டு விலாசம் கேட்டால் "யாரு அந்த ஆறு பெண் பிள்ளைகளின் வீடா" என்று அடையாளம் காட்டுவினம் அந்தளவிற்கு அபியின் குடும்பம் பிரபலமானது. ஆண் பிள்ளையை எதிர்பார்த்த கடைசியாக பெற்றதும் பெண் பிள்ளையாக போயிற்று.

அபியின் அப்பா அடிக்கடி சொல்வார், "ஆறு இளவரசிகளும் தேவதைகள். சீதனம் பற்றி கவலைப்படாமல் நான் இருக்கலாம் பிள்ளைகளைத் தேடி இளவரசன்கள் குதிரையில வருவான்கள். அவன்கள் தான் கெஞ்ச போறன்கள் மாமா உங்கட பொண்ணுகளை தாங்க என்று போட்டி போட்டு வருவான்கள்" அப்பாட கனவு பலிக்கவில்லை. குதிரைக்கு பதிலாக விமானத்தில் அல்லவா பயணப்படுகின்றேன். தனக்குள்ளே சொல்லிச் சிரித்தாள். யாரோ அபியின் இருக்கைக்கு அருகில் வந்து "எஸ்கியூஸ்மீ" எனும் போதே நினைவுக்கு மீண்டாள்.. பக்கத்தில் தமிழ் பெண்மணி ஒருவர் வந்து அமர்ந்தாள். அபியை விட வயதில் கூடியவர் போல இருந்தாள். அழகானவர். பெரிய பொட்டு வைத்திருந்தார். அருகில் குழந்தையுடன் இருந்தார். குழந்தை துறுதுறு என்று அழகாய் இருந்தான். விரக்தியாக எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். அபி சிறிது நேரத்தில் கதை கொடுத்தாள். "அக்கா நீங்க பிரான்ஸ்சிற்கா பயணம்?" "ஓம் நான் பிரான்ஸ் தான் போறன், இலங்கையில அம்மாவும் தங்கையும் இருக்கினம் பார்த்துட்டு வாரன் நீங்க எந்த இடம்"



"நான் குருநகர் யாழ்ப்பாணம் இப்ப கணவர்ட்ட பிரான்ஸ் போறன்"

"ஓ அப்படியா நல்லது"

என்றவைட முகத்தில் எந்த வித உணர்வுமற்றவளாய் அந்த அக்கா.

அபி மௌனத்தை கலைத்தவளாய்

"அக்கா வெளிநாட்டு வாழ்க்கை ஓகேயா" என்றதும் அவளின் கண்களில் கண்ணீர் ததும்பியது.

"அவர் அவருக்கு அமையும் வாழ்க்கையை பொறுத்தது. நான் பத்து வருடமாக வெளிநாட்டில் தான் இருக்கிறேன். கணவர் தனது இருபது வயதிலே வந்துட்டார். அவர் உழைத்து தன் குடும்பத்தை கரை சேர்க்க வேண்டிய நிலை, தனக்கு என்று எதுவும் சேர்க்கல. அதிகமாக புகைக்கும் பழக்கம் இருந்தது. வயதாகியே திருமணம் செய்தார். மகன் லேட்டாக தான் பிறந்தான். அவருக்கு புற்று நோய், வாதம் வந்து படுத்த படுக்கையாகி சுகப்படுத்த முடியல. காலமாகிட்டார். நானும் மகனும் ஆதரவற்றவர்கள் போல இருக்கிறோம். அம்மாக்கும் எண்பது வயது. கண்பார்வை குறைவு. தங்கை தான் பார்க்கிறாள். இப்ப நான் லீவு முடிய திரும்பி போறன் பிரான்ஸ். துணிவு இருந்தால் போராடலாம். வாழும் வரை போராடுவோம். தங்கையையும் கரை சேர்க்கனும்." என்று தனது ஆதங்கத்தை சொன்னாள். விமானத்தில் ஏறும் நேரம் வந்ததும் இருவரும் இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள்.

அபிக்கு கவலை அதிகமானது. பிரான்ஸ் விமான நிலையத்தில் இறங்கியதும் அக்கா தனது தொலைபேசி இலக்கத்தை அபியிடம் கொடுத்தாள்.

"என்னுடன் நீங்க நேரம் கிடைக்கும் போது கதைங்க" என்றதும் அபி

"அக்கா உங்கட பெயர் என்ன என்று கேட்காமலே கதைச்சுட்டன்" "ஓம் என்ன! என்னுடைய பெயர் மகாலட்சுமி, மகா என்று கூப்பிடுங்க" என்றவள் தன் அன்பு மகனை தூக்கிகொண்டு தனது பெட்டியுடன் விமான நிலையத்தை விட்டு வெளியேறினாள்.

சிறிது நேரத்தில் அபியின் கணவரும் வந்து அவளை அழைத்துச் சென்றார். வந்ததுமே அம்மாக்கு கோல் எடுத்து கதைத்து விட்டு ஜெர்மனில் இருக்கும் அக்காவிடமும் நலமாய் வந்து சேர்ந்ததாக கூறினாள். கணவரும் அபியை அழகாக பார்த்துக்கொண்டார். மதன் அவளுக்கு ஏற்றவர் தான். எப்போதும் கலாய்த்துக் கொண்டே இருப்பார். பாடல் கேட்பதில் அலாதி பிரியர். அதனால் மதன் வீட்டில் வானொலியில் பாடல் தென்றலுடன் கலந்து வீடு முழுவதும் இசை கமழும். அபி இலங்கையில் இருந்து வந்ததிற்கு வானொலியை மறந்தே விட்டாள். ஆசையுடன் வானொலி பக்கமாக திரும்பினாள். மதன் "என்ன" என்று கேட்க வெட்கப்பட்டவளாய் "இங்க வந்ததும் என் நாயகனை மறந்து விட்டேன்" என்றதும் "என்ன நாயகனா யாரு எனக்கு தெரியாமல்" என்று செல்லத்துடன் கோவமாக கேட்பது போல் கேட்க வானொலியை காட்டி "இவன் தான் இலங்கையில் என் இனிமையான பொழுது போக்கு" என்றாள்.

"சரி உன் நாயகன் உன்னிடமே இருக்கட்டும் என்னையும் கொஞ்சம் நினைச்சுக் கொள்ளம்மா" என்றதுமே வெட்கப்பட்டு கையடக்கமே அளவான வானொலி பெட்டியுடன் அறைக்குள் ஓடினாள். இலங்கை நேரப்படி மதிய செய்திகள் வாசிக்கப்பட்டது. வெளிநாட்டு செய்தியில் பத்து வருடங்களாக நடைபெற்று வந்து கொண்டிருந்த வழக்கு ஒன்றின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு கொண்டிருந்தது. அவ்வழக்கானது ஐவர் அடங்கிய குழு ஒன்று பேருந்தில் தனியாகச் சென்ற பல்கலைக்கழக மாணவியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த சம்பவம். பத்து வருடங்களாக இவ்வழக்கு நடைபெறுகின்றது. கோடிகளை ஏமாற்றிய ஊழல்வாதிகளை கடந்த ஐந்து வருடமாக விசாரிக்கிறாங்களாம். தண்ணீர் போத்தலை இருபது ரூபா கூட வைச்சு விற்றவருக்கு உடனே தீர்ப்பு ஏழு மாத சிறை தண்டனையாம். அபி இலங்கையில் இருக்கும் போது, இரண்டு வருடங்களுக்கு முன் காதலனுக்கு நஞ்சு வைத்து கொன்ற சம்பவத்திற்கு உடனடியாக தீர்ப்பும் வழங்கப்பட்டது. ஆனால், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட இவ்வழக்கானது 10 வருடங்களை கடந்தும் எவ்விதமான தீர்வும் எட்டப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமே. இந்த உலகமே விசித்திரமானது.

"மகா அக்கா வாழ வேண்டும் என்று ஆசைப்பட்ட போது, அவரது வாழ்க்கை பறிக்கப்பட்டது. காதலன் தனது காதலியை நம்பி பழகியதற்காக விஷம் வைக்கப்பட்டு கொல்லப்பட்டார். பல்கலைக்கழக மாணவிக்கு நடந்த கொடூரத்திற்கு தீர்வு வழங்கப்பட கால தாமதமாகியது. ஊழல்வாதிகள் பயமின்றி நடமாடுவது என்று ஏற்றுக்கொள்ளவே முடியாத நீதிமன்ற தீர்ப்புகள். இந்த சமூகம் எதை நோக்கி பயணப்படுகிறது என்பது புரியாத புதிராகவே....

தண்டனை பாரபட்சம் இன்றி நிறைவேற்றினால் மட்டுமே இனி வரும் தலைமுறை அழகாக வாழ்வார்கள்." தனக்குள்ளே நினைத்துக் கொண்டு அவளின் நாயகனை அணைத்தப்படி அறையை விட்டு வெளியேறினாள்.

குஜராத்

பட்டாசு ஆலையில்

# வெடி விபத்து; 18 பேர் பலி

குஜராத் மாநிலம், பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள பட்டாசு ஆலையில், செவ்வாய்க்கிழமை (1) அன்று இடம்பெற்ற பட்டாசு விபத்தில் 18 பேர் உயிரிழந்ததுடன், 5 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பட்டாசு ஆலையில் ஊழியர்கள் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, காலை 9.45 மணியளவில் பட்டாசு ஆலையில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அந்த பட்டாசு ஆலை முற்றிலும் இடிந்து தரைமட்டமாகியுள்ளது.



அங்கு தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைத்துள்ளனர்.

கட்டிட இடிபாடுகளில் இருந்து 18 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பலர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கட்டிட இடிபாடுகள் இடையே மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என கருதப்படுகிறது.

தமிழ்நாடு

தீ விபத்து:

# 20 குடிசைகள் தீக்கிரை

விருதுநகர் மேலத்தெரு பேட்டையில் இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான பகுதியில் உள்ள குடிசை குடியிருப்பில் புதன்கிழமை (2) அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்தில், 20 குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன.

இந்த பகுதியில், சுமார் 200க்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் இருக்கின்றன.

தீக்கிரையான குடிசைகளின் உள்ளே எவரேனும் சிக்கி இருக்கிறார்களா என்பது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அப்பகுதியை சேர்ந்த ஒருவரின் வீட்டில் இருந்த சிலிண்டரில் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, தீ விபத்து ஏற்பட்டு அடுத்தடுத்த வீடுகளில் தீ பரவியது தெரியவந்துள்ளது.



சீனா

சீன அதிகாரிகளுக்கு

# பொருளாதார தடை

சீனா மற்றும் ஹொங்காங்கைச் சேர்ந்த 6 அதிகாரிகளுக்கு அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

சீனாவின் தன்னாட்சி பிராந்தியமான ஹொங்காங்கில் அரசாங்கத்துக்கு எதிராக 2019இல் மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது.

இதனை ஒடுக்குவதற்காக ஹொங்காங்கில் தேசிய பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த சட்டத்தைப் பயன்படுத்தி ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறி அமெரிக்கர்கள் உள்பட 19 பேர் கட்டாயமாக நாடு கடத்தப்பட்டனர்.



இதனால், நாடு கடத்த அடக்குமுறையில் ஈடுபட்டதாக கூறி, சீனா மற்றும் ஹொங்காங்கைச் சேர்ந்த 6 அதிகாரிகளுக்கு அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

ஏற்கெனவே வர்த்தக வரி உயர்வு மற்றும் தாய்வான் விவகாரத்தில் இரு நாடுகள் இடையேயான உறவில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில், தற்போதைய இந்த பொருளாதார தடை மேலும் பதற்றத்தை தூண்டியுள்ளது.

காசா

ஹமாஸுக்கு எதிராக போராட்டம்:

# அறுவருக்கு மரண தண்டனை

கடந்த வாரம், ஹமாஸ் குழுவினர் காசாவில் இருந்து வெளியேற வேண்டும் என ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் வடக்கு காசாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்குப் பொதுவெளியில் வைத்து சாட்டையடி கொடுக்கப்பட்டதாகவும், 6 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், போராட்டம் நடத்தியவர்களில் பலர் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட ஆறு பேரில் 22 வயதான இளைஞன் ஒருவரும் உள்ளடங்குகிறார்.

இவர், காசாவின் டெல் அவிவ் பகுதியில் தனது குடும்பத்துடன் வசித்து வந்தவர். கொல்லப்பட்ட பின்னர் அவரது உடலை அவரின் வீட்டின் வெளியே



ஹமாஸ் விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

'எதிர்ப்பு தெரிவிக்கத் துணிந்த 22 வயது பாலஸ்தீனியர்' கொல்லப்பட்டதாக இஸ்ரேலின் அதிகாரப்பூர்வ X பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இஸ்ரேலிய செய்தி நிறுவனம் ஒன்று, அவர் (கொல்லப்பட்ட இளைஞரை) கழுத்தில் கயிறு கட்டி இழுத்துச் செல்லப்பட்டு, மக்கள் முன்னிலையில் தடிகளாலும், உலோகக் கம்பிகளாலும் தாக்கப்பட்டார் என்று பெயர் வெளியிட விரும்பாத காசாவைச் சேர்ந்த ஒருவர் கூறியதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த 2019ஆம் மற்றும் 2023ஆம் ஆண்டுகளிலும் ஹமாஸை எதிர்த்து காசாவில் கிளர்ச்சிகள் நடந்தன. ஆனால் அவற்றை ஹமாஸ் கடுமையான அடக்குமுறையால் கட்டுப்படுத்தியாக நம்பப்படுகிறது.



பாகிஸ்தானுக்கு எதிரான

# தொடரை கைப்பற்றிய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற நியூசிலாந்து, ஹமில்டனில் புதன்கிழமை (02) நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை நியூசிலாந்து உறுதி செய்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் மொஹமட் றிஸ்வான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமெனத் தெரிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, மிற்செல் ஹேயின் ஆட்டமிழக்காத 99 (78), முஹமட் அப்பாஸின் 41 (66), நிக் கெல்லியின் 31 (23) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சுஃபியான் முக்கீம் 2, பாஹீம் அஷ்ரப், அகிஃப் ஜாவிட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 293 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், வில் ஓ ரூர்க், ஜேக்கப் டஃபி (3), பென் சியர்ஸ் (5), நாதன் ஸ்மித்திடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 41.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 208 ஓட்டங்களையே பெற்று 84 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் பஹீம் அஷ்ரஃப் 73 (80), நசீம் ஷா 51 (44) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹே தெரிவானார்.

ஐ.பி.எல்:

# லக்னோவை வீழ்த்திய பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

லக்னோ: 171/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் 44 (30), அயுஷ் படோனி 41 (33), ஏய்டன் மார்க்ரம் 28 (18), அப்துல் சமட் 27 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங் 3/43 [4], மார்கோ ஜன்சன் 1/28 [4], கிளென் மக்ஸ்வெல் 1/22 [3], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 0/15 [2], லொக்கி பெர்கியூசன் 1/26 [3], யுஸ்வேந்திர சஹால் 1/36 [4])

பஞ்சாப்: 177/2 (16.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரப்சிம்ரன் சிங் 69 (34), ஷ்ரேயாஸ் ஐயர் ஆ.இ 52 (30), நெஹால் வதேரா ஆ.இ 43 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிக்வேஷ் ரதி 2/30 [4], மணிமாறன் சித்தார்த் 0/28 [3])

போட்டியின் நாயகன்: பிரப்சிம்ரன் சிங்

இந்நிலையில். கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



# ஜேர்மனிய கிண்ணம்: வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

ஜேர்மனிய கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசன் வெளியேற்றப்பட்டுள்ளது.

அர்மினியா பியபெல்டின் மைதானத்தில் புதன்கிழமை (02) நடைபெற்ற அவ்வணியுடனான அரையிறுதிப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து லெவர்குசன் வெளியேறியுள்ளது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பொரெஸ்டிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் புதன்கிழமை (02) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

பொரெஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை யுனைட்டெட்டின் முன்னாள் வீரரான அந்தனி எலங்கா பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 61 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 57 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 49 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் செல்சியும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட ஆர்சனலும், பொரெஸ்டும் ஒரு போட்டியில் அதிகமாக விளையாடியுள்ளன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை 03, ஏப்ரல் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.